உங்கள் வேதத்தை அறியுங்கள்

# வேதாகம உடன்படிக்கைகள்

மேல்நிலை வேத பாடம்




ஜெர்ரி பேட்ஸ்

Jerry Bates

# வேதாகம உடன்படிக்கைகள்

முதல் பதிப்பு, நவம்பர் 2017

பிரசுர உரிமை @
**J.C. ஆத்தும ஆதாயப் பயிற்சிப் பள்ளி, மதுரை**


வடிவமைப்பு மற்றும் பிழை திருத்தம்
**கிங்ஸ்லி ராஜா, ஆண்டனி ராஜா**

■

அச்சிட்டு வெளியிட்டவர்
**P.C. பிலேமோன் ராஜா**
இயக்குனர், J.C.ஆத்தும ஆதாயப் பயிற்சிப் பள்ளி

■

பிரதிகள் கிடைக்குமிடம் :
**J.C. ஆத்தும ஆதாயப் பயிற்சிப் பள்ளி**
45 C / 1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016. தமிழ்நாடு, இந்தியா.
அலைபேசி : **92 44 21 44 21, 92 44 31 44 31**
மின் அஞ்சல் (e-mail) : obey2jesus@gmail.com



# புத்தக ஆசிரியரைப் பற்றி...

JERRY & PAULA BATES

சகோதரர் ஜெர்ரி மற்றும் சகோதரி பவுலா பேட்ஸ் ஆகிய இருவருமே அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள டென்னஸியை தாயகமாகக் கொண்டவர்கள். ஜெர்ரி (Jerry) அவர்கள் மிஸிஸிப்பியில் ஃபிரிடு ஹார்டெமன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்.

அவர் பிரசங்கிக்கத் தொடங்கிய பின், டென்னிஸியிலுள்ள மெம்பிஸ்ஸின் ஹார்டிங் பல்கலைக்கழகத்திலிருந்து மார்க்கத் தத்துவக்கலையில் முதுநிலைப் பட்டத்தையும் (M.A),
இறையியலில் முதுநிலைப் பட்டத்தை (M.Div.)
ப்ளாரன்ஸ் அலபாமாவில் உள்ள ஹெரிடேஜ் கிறிஸ்தவ பல்கலைக்கழகத்திலிருந்தும் பெற்றார்.

அவர் டென்னஸியிலும், ஆர்க்கென்ஸாசிலும் மிஸிஸிப்பியிலும் உள்ள உள்ளூர் சபைகளிலும் 25 வருடங்களாக ஊழியம் செய்தார்.

2007 ஆகஸ்ட் மாதத்தில், சகோதரர் ஜெர்ரியும் சகோதரி பவுலாவும் வினோனாவுக்கு வந்து, உலக ஆத்தும ஆதாய **(World Evangelism)** குழுவுடன் இணைந்தனர். பவுலா அவர்கள், கணக்குகளை கையாள்வதிலும் (Accounting), வெளிநாடுகளில் சென்று ஊழியப்பணி செய்யவும் (Mission Trips) பயணங்களை மேற்கொள்கிறார். ஜெர்ரி அவர்கள், சர்வ தேச சத்தியத்தின் குரல் (TVOTI) எனும் புத்தக வெளியீட்டில் இணை ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

அவர் அந்தப் புத்தகங்களை அயல் நாடுகளுக்கு அனுப்பி வைப்பதிலும், ஊழியப் பணிக்கென பயணங்களை மேற்கொண்டும் வருகிறார். மேலும் இவர் கொலோராடோ மாநிலத்திலுள்ள டென்வர் எனும் இடத்தின் பேர்வேலி வேதாகமப் பயிலகத்தின் (Bear Valley Bible Inst.) ஒருங்கிணைப்பாளராகவும் ஆசிரியராகவும் பணியாற்றுகிறார்.

அவர் இந்தியாவில் இரண்டு முழு நேர ஊழியர் பயிற்சிப் பள்ளியில் பணியாற்றுவதோடு, தேவைக்கேற்ப பல வேதாகம பயிற்சிப் பள்ளிகளிலும் போதிக்கிறார். அவர் நமது J.C ஆத்தும ஆதாய பயிற்சிப் பள்ளிகளிலும் (J.C. School of Evangelism) கல்வித்துறைத் தலைவராக (Academic President) பணியாற்றுகிறார், இந்த J.C ஆத்தும ஆதாயப் பயிற்சிப்பள்ளி, கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களுக்கு செயலூக்கம் கொடுத்து, ஆத்தும ஆதாயப் களப்பணியில் சுறுசுறுப்பாய் இயங்க ஊக்கம் கொடுக்கிறது. தங்கள் பயணங்களில் செல்லும்போது பவுலா அவர்கள், மகளிர் வகுப்புகளிலும் கருத்தரங்குகளிலும், குழந்தைகள் வகுப்புகளிலும் போதிக்கிறார்.

இத்தம்பதியர், இந்தியாவிலும் உலகத்தின் பல பகுதிகளிலும் பணியாற்றி, பெந்தெகோஸ்தே நாளில் (Acts 2) பிரசங்கிக்கப்பட்ட சுவிசேத்தைப் பரப்பிக் கொண்டுள்ளனர்.

சகோ. ஜெர்ரி மிக எளிமையான முறையில் சத்தியத்தைப் போதிப்பவராக அறியப்பட்டவர். இவருடைய செய்தி கேட்பவர்களிடம் வல்லமையாக போய்ச் சேருகிறது. இந்தப் பாடங்கள், வாசகர்களுக்கு, எளிமையான முறையில் வேதாகமம் போதிக்கும் சத்தியத்தை அறிந்து பின்பற்ற உதவிகரமாயிருக்கும்படி ஜெபிக்கிறேன்.

ஆத்தும ஆதாய ஊழியத்தில்,
சகோ. **P.C. பிலேமோன் ராஜா,** M.Th.,
இயக்குனர், J.C. ஆத்தும ஆதாய பயிற்சிப் பள்ளி

# பொருளடக்கம்


1.வேதாகம உடன்படிக்கைகள் 7

2.மோசேயின் பிரமாணம் 14

3.கிறிஸ்துவின் பிரமாணம் 20

4.புதிய உடன்படிக்கையின் மேன்மை 26

5.இரண்டு ஸ்திரீகளும் இரண்டு பிரமாணங்களும் 34

6.புதிய உடன்படிக்கையின் நடைமுறை பயன்பாடுகள் 40

# 1 வேதாகம உடன்படிக்கைகள்
## BIBLICAL COVENANTS

இந்த ஆராய்ச்சி மிகவும் முக்கியமானது; இருப்பினும் பெரும்பாலும் தவிர்க்கப்படும் ஒரு பாடமாக இது இருக்கிறது. கிறிஸ்தவ கூட்டங்களுக்குள் இருக்கும் மிகநெடிய வித்தியாசங்களுக்கான முக்கிய காரணங்களில் ஒன்று, உடன் படிக்கைகளை தவறாக புரிந்து கொள்ளுதலினால் ஆகும். வேதாகமம் முழுவதுமே தேவனுடைய வசனமாகையால், நாம் அவை எல்லாவற்றுக்கும் கீழ்படிய வேண்டும் என்பதை மிக எளிமையாக புரிந்து கொள்ளலாம். உண்மையில், எந்த ஒருவரும் அவை முழுவதுக்கும் கீழ்படிய முயற்சிப்பதில்லை. பழைய ஏற்பாடு ஆராதனையின் போது பலதரப்பட்ட மிருகங்களை பலி செலுத்தும் படி கட்டளை கொடுத்தது; ஆனால் தேவனுக்கு செய்யும் தொழுகையில் இன்று வரை யாரும் மிருகபலியை தொடர்ந்து செலுத்துவதாக நான் காணவில்லை. ஆகையால், வேதாகம உடன்படிக்கைகளைக் குறித்த ஒரு ஆழமான படிப்பானது மிகவும் அவசியமாகும்.

### உடன்படிக்கை என்றால் என்ன ?

இந்த ஆராய்ச்சியில், உடன்படிக்கை என்றால் என்ன என்று சரியாகத் தீர்மானிப்பது, நமது முதல் படியாகும். இதை எளிமையாகச் சொன்னால், உடன்படிக்கை என்றால் ஒரு ஒப்பந்தம் என்று பொருள். இரண்டு தரப்பினரிடையே ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு ஒப்பந்தம். இதில் இருவருமே பலவகையிலும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள். பழங்காலத்தில், இரண்டு வகையான உடன்படிக்கைகள் இருந்தன. ஒருவகை உடன்படிக்கை, சமமான இரண்டு தனி நபர்களுக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தம். அவர்கள் கூடி கலந்து பேசி, இருவரும் அந்த ஒப்பந்தத்துக்கு கட்டுப்படும் முடிவுக்கு வரும் வரை ஒத்துப்போகிற சூழலை ஏற்படுத்திக் கொள்வார்கள்; அது இருநாடுகளுக்கும் இடையே இன்று ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தத்தைப் போன்றது. உடன்படிக்கையில் மற்றொரு வகை, ஒரு மேலான நபர் தன்னைக் காட்டிலும் கீழான நபரிடத்தில் செய்து கொள்வதாகும் அதாவது, ஒரு வெற்றி கொண்ட நாடு மற்றொரு நாட்டுடன் ஏற்படுத்திக்கொள்ளும் உடன்படிக்கை வகையாகும். மேலான நபரின் சில கோரிக்கைகளோடு கூட சில வாக்குறுதிகளோடும் ஒப்பந்தம் நிறைவேறும் கீழான நபர் அவைகளுக்குக் கீழ்படிய வேண்டும். இல்லாவிட்டால்,

விளைவை சந்திக்க வேண்டியிருக்கும். இதற்கு ஒத்த உடன்படிக்கைகளைதான், தேவன் மனிதனுடன் ஏற்படுத்தினார். தேவன் நம்முடைய சிருஷ்டிகராக இருக்கிறபடியால், மனுஷன் அவரோடு பேரம் பேசி, தனக்கென்று எதையும் கோரமுடியாது.

இந்த உடன்படிக்கைகள் வழக்கமாக சம்மந்தப்பட்ட நபர்களுடைய வாக்குறுதிகளோடு, சாட்சிகள் முன்னிலையில் ஏற்படுத்தப்படும். ஏதோ ஒரு வகையில் அது உறுதி படுத்தப்படுவதற்கு, சில நினைவுச்சின்னத்தை ஏற்படுத்தியோ அல்லது பரிசுகளை பரிமாறியோ ஒப்பந்தம் செய்து கொள்வார்கள். உடன்படிக்கைகளின் முக்கியத்துவத்தை இது காட்டுகிறது. ஒருமுறை உடன்படிக்கைகளை ஏற்படுத்தி விட்டால், மிக வினயமான விளைவுகள் ஏற்படுத்தப்பட்டாலொழிய, வேறு எக்காரணம் கொண்டும் மீறப்படாது. **கலாத்தியர் 3:15ல்** பவுல், "சகோதரரே, மனுஷர் முறைமையின்படி சொல்லுகிறேன் ; மனுஷர்களுக்குள்ளே உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை ஒருவனும் தள்ளுகிறதுமில்லை, அதினோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை." என்று உடன்படிக்கையின் இத்தகைய பார்வையை குறிப்பிடுகிறார். மனுஷர்களுக்குள்ளே செய்யப்பட்ட உடன்படிக்கை அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடியதாயிருக்குமானால், தேவனோடு ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கை இன்னும் எவ்வளவு அதிகமாய் கட்டுபடுத்தக்கூடும். உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டவர்களை மட்டுமே அவைகள் கட்டுப்படுத்தும் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கவனிக்கவும்.

நான் A என்பவருடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவேனானால், பிறகு அந்த ஒப்பந்தம் அவருக்கும் எனக்கும் இடையே மட்டுமே கட்டுப்படுத்தும். அது B என்ற நபரையோ, மற்ற எவரையுமோ கட்டுப்படுத்தாது. இதே கொள்கைதான் வேதகாமம் சார்ந்த உடன்படிக்கைகளுக்கும் பொருந்தும். இது தொடர்ந்து வரும் பாடங்களில் நினைவில் கொள்வதற்கு ஒரு விசேஷித்த முக்கியத்துவமுள்ள கருத்தாகும்.

## தேவன் ஏற்படுத்தின பலதரப்பட்ட உடன்படிக்கைகள்

ஏற்கனவே நாம் சொன்னபடி, தேவன் பல்வேறு மனுஷர்களிடத்தில் பல்வேறு காலங்களில் வித்தியாசப்பட்ட உடன்படிக்கைகளை ஏற்படுத்தினார். முதல் உடன்படிக்கையை அவர் ஆதாமிடத்தில் பண்ணினார். தேவன் ஒரு தோட்டத்தை

சிருஷ்டித்து ஆதாமையும் ஏவாளையும் அதிலே கொண்டுபோய் வைத்தார். தேவன் அவர்களுக்கு எல்லாவற்றையும் கொடுத்தார். மேலும் அது பூமியிலயே ஒரு சொர்க்கம் போன்ற இடமாக இருந்தது. தேவன் அவர்களிடத்தில் ஒரே ஒரு நிபந்தனையைத் தவிர, மற்றபடி அவர்கள் மரணமற்ற (நித்திய) வாழ்க்கையை வாழ்வார்கள் என்று வாக்குத்தத்தம் பண்ணினார். அவர்கள் நன்மை தீமை அறியத்தக்க கனியை புசிக்கக்கூடாது என தடைவிதிக்கப்பட்டவர்களாயிருந்தார்கள். ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட கனியைப் புசித்து, உடன்படிக்கையை மீறினதினால், ஆதலால் அந்தப் பாவத்தினிமித்தம் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

நாம் வாசிக்கிற <u>இரண்டாவது உடன்படிக்கை</u> நோவாவுடனானது. தேவன், இனி உலகத்தை ஒரு போதும் ஜலப்பிரளயத்தால் அழிப்பதில்லை என்ற உடன்படிக்கையை செய்தார். தேவனுக்கும் மனுஷருக்குமிடையே அந்த உடன்படிக்கையின் அடையாளமாக வானவில் இருந்தது. **(ஆதியாகமம் 9:9–17).** இந்த உடன்படிக்கையில் நோவாவும், ஜீவ ஜந்துகளும் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்ற கட்டளையும் உட்பட்டது **(ஆதியாகமம் 8 : 17)**

தாவீதுடன் மற்றொரு உடன்படிக்கையைச் தேவன் செய்தார். **2 சாமுவேல் 7ல்** தாவீதுடன் தேவன் செய்த வாக்குத்தத்தம் வருமாறு, "உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். உன் வீடும், உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்கிறார் என்று சொல்லச் சொன்னார்." **(2 சாமுவேல் 7: 12, 16)** இந்த வாக்குத்தத்தத்தை தாவீது **2 சாமுவேல் 23 : 5 ல்** <u>உடன்படிக்கை</u> என்பதாகச் சொல்லுகிறார். இந்த உடன் படிக்கை மீண்டும் **சங்கீதம் 132:12 ல்** குறிப்பிடப்படுகிறது, "உன் குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும் காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார் ; அவர் தவறமாட்டார்." தாவீதின் சந்ததி அவருடைய சிங்காசனத்தின் மேல் என்றென்றைக்கும் வீற்றிருப்பர் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நாம் காணமுடிகிறது.

தேவன், ஆபிரகாமுடனும் ஒரு உடன்படிக்கைகயைச் செய்தார். இதை நாம் **ஆதியாகமம் 12:1–3 ல்** பிரதானமாக காண்கிறோம், "கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன்

தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்."

தேவன் ஆபிரகாம் மூலமாக ஏற்படுத்திய இந்த உடன்படிக்கையிலே நான்கு முக்கியமான வாக்குத்தத்தங்கள் அடங்கியிருப்பதை காணலாம். 1. ஆபிரகாம், ஒரு பெரிய தேசத்தின் தகப்பனாவார்; 2. இந்த புதிய தேசத்திற்கென்று குடியிருக்கும்படி ஒரு இடம் இருக்கும்; 3. தேவன் ஆபிரகாமை ஆசீர்வதிப்பாராக வாக்குக் கொடுத்தார்; மேலும், ஆபிரகாமின் மூலம் பூமியிலுள்ள அனைத்து தேசங்களும் ஆசீர்வதிக்கப்படும். இதில், இந்த 4ம் வாக்குத்தத்தம் மட்டும் ஆவிக்குரிய தன்மையுடையது; முதல் மூன்றும் மாம்ச வாழ்விற்கான ஆபிரகாமுக்குரிய வாக்குத்தத்தம். இந்த 4வது ஆவிக்குரிய வாக்குத்தத்தம், ஆபிரகாமுக்கு மட்டும் இன்றி முழு உலகிற்கும் ஆவிக்குரிய இரட்சிப்பை கொண்டு வரக்கூடிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கான மறைமுக வெளிப்பாடாகும்.

பிற்காலத்திலே, ஆபிரகாமின் சந்ததியார் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியேறிய பின்பு, அவர்கள் சீனாய் மலையினிடமாக வழிநடத்தப்பட்டு, அங்கே தேவன், மோசேயோடும் இஸ்ரவேல் ஜனங்களோடும் ஒரு உடன்படிக்கையைச் செய்தார். "மோசே தேவனிடத்திற்கு எறிப்போனான்; கர்த்தர் மலையிலிருந்து அவனைக்கூப்பிட்டு: நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின் மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீருகள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்." **(யாத். 19:3–6).** "இந்த உடன்படிக்கையிலே பத்து கட்டளைகளும் அடங்கும். 28 அங்கே அவன் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவும் பகலும் நாற்பதுநாள் கர்த்தரோடே இருந்தான்; அவன் பத்துக்கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினான்." **(யாத் 34:38).**

வேதாகம உடன்படிக்கைகளில் இறுதியான உடன்படிக்கைதான், எல்லா மனுக்குலத்தோடும் செய்யப்பட்டதாகும்; இது, சிலுவையிலே இயேசுவின் மரணத்தினாலே நிலைநிறுத்தப்பட்டது. இந்த கடைசி இரண்டு உடன்படிக்கைகளைப் பற்றிதான் இந்த இரண்டு உடன்படிக்கைகளுக்குள் உள்ள வேறுபாடுகளை புரிந்துகொள்ள குழப்பிக்கொள்வதுதான், இன்றைய மதஉலகில் நிறைய பிரிவினைகளுக்கு காரணம். ஆகையால், வருகின்ற பாடங்களில், இந்த இரண்டு உடன்படிக்ககளில் (மோசேயிடம் செய்த உடன்படிக்கை, கிறிஸ்துவின் உடன்படிக்கை) உள்ள வித்தியாசப்பட்ட அம்சங்களை கவனிப்போம்!

பெயர் .................................................... பதிவு எண் ....................................

**கேள்விகள்**

1. உடன்படிக்கை என்றால் என்ன ?

2. ஒரு உடன்படிக்கை என்பது, யார்யாரைக் கட்டுப்படுத்தும்?

3. தேவன் தமது உடன்படிக்கையை ஏற்படுத்தின, நான்கு தனி நபர்களைக் குறிப்பிடுக.

4. இஸ்ரவேலுடன், எங்கே உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது ?

5. இன்றைய மார்க்க உலகின் பிரிவினைக்கு காரணமாயிருக்கும் மிகப்பெரிய காரியம் எது ?

**உண்மை / தவறு**

1. தேவன் தாவீதுக்கு கொடுத்த பிரதான வாக்குத்தத்தம் என்னவென்றால், அவருடைய ராஜ்யம் என்றென்றைக்கும் நிலைநிற்கும் என்பது தான்.

உண்மை/தவறு

2. ஆபிரகாமின் உடன்படிக்கையில் கொடுக்கப்பட்ட கடைசி வாக்குத்தத்தம், இயேசுவைக் குறிக்கிறது.

உண்மை/தவறு

3. பலுகிப்பெருகுதல் எனும் கட்டளை வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருப்பது, ஒவ்வொருவருக்கும் பொருந்தும்.

உண்மை/தவறு

4. மோசேயின் நியாயப்பிரமாணம், அனைத்து மனிதர்களுக்கும் கொடுக்கப்பட்டது.

உண்மை/தவறு

5. பத்துக் கட்டளைப் பிரமாணங்கள், மோசேயின் பிரமாணத்தின் ஒரு பகுதியல்ல.

உண்மை/தவறு

# 2 மோசேயின் பிரமாணம்
## THE LAW OF MOSES

சீயோன் மலைக்கு அருகில் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கியிருந்த போது மோசேயின் பிரமாணம் கொடுக்கப்பட்டது. "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையை கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் ; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்" **(யாத்திராகமம் 19: 5,6)** இஸ்ரவேலருக்கு தேவன் விசேஷித்த வாக்குத்தத்தங்களைச் செய்திருந்தார் என்பதைக் கவனியுங்கள். அவருடைய சத்தத்திற்கு அவர்கள் செவிகொடுத்தால், அவர் அவர்களை சகல ஜனங்களிலும், அவருக்குச் சொந்த சம்பத்தாயிருப்பார்கள் என்று வாக்குத்தத்தம் செய்தார்; அதாவது பாதுகாப்பாய் வைத்துக்கொள்ளும் பொக்கிஷமாயிருப்பார்கள் என்றார். தேவனுடைய விசேஷித்த ஆசீர்வாதமும் பாராமரிப்பும் அவர்களுக்கு உண்டாயிருக்கும் என்பது இதன் பொருள். சகல ஜனங்களும் இந்த உடன்படிக்கைளை ஆர்வமாய் ஏற்றுக் கொண்டார்கள்."அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தரிடத்தில் தெரிவித்தான்" **(யாத் 19:8).** இந்த உடன்படிக்கையை சந்தோஷமாய் ஜனங்கள் ஏற்றுக் கொண்டிருந்த போதிலும், வரலாற்றினூடே இஸ்ரவேலர்கள் திரும்பத்திரும்ப தேவனோடு செய்த உடன்படிக்கையை மீறினார்கள் என காண்கிறோம்.

இஸ்ரவேலர்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றபோது, அவர்கள் ஒரு புதிய தேசத்தாராயிருந்தார்கள். ஒவ்வொரு தேசத்தாருக்கும் பிரமாணங்கள் (சட்டங்கள்) தேவை; ஆகையால் தேவன் ஒரு பிரமாணத்தை அவர்களுடைய வாழ்வின் நலனுக்காகக் கொடுத்தார். மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட பிரமாணத்தில், ஆவிக்குரிய, மற்றும் தற்காலிகமான சட்டங்கள் இருந்தன. இன்னொரு வார்த்தையில் சொன்னால், அவர்கள் தேவனை தொழுது கொள்ளவும் சேவிக்கவும் வகையில் வழிநடத்தும் முறைமைகளையும், ஒருவருக்கு ஒருவர் உறவு கொள்ளும் வகையில் சட்டங்களும் கொடுக்கப்பட்டது. இந்தப் பிரமாணங்களில் பத்துக் கட்டளைகளும், அதேபோல வேறுபல கட்டளைகளையும், ஆசாரியத்துவ முறைகள், பலி செலுத்தும் முறை போன்ற போதனைகளையும் கொடுத்திருந்தார். இந்தப்

பிரமாணங்களெல்லாம் யூதர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தன, புறஜாதிகளுக்கல்ல.

தேவன், மோசேயின் பிரமாணம் என்றென்றைக்கும் நிலைநிற்கத்தக்கதாக அதை கொடுக்கவில்லை என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டியது அவசியம். எரேமியாவின் எழுத்துக்கள் மூலம் தேவன், "இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதாக் குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்" என்றார் **(எரேமியா 31 : 31).** ஒரு புதிய உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் போது, அது தானாகவே பழைய உடன்படிக்கை அல்லது பழைய ஒப்பந்தத்தின் இடத்தைப் பெறுகிறது. இந்தப் புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கைக்குப் சேர்க்கப்பட்டதல்ல; இது பழைய உடன்படிக்கைக்குப் பதிலாக (அதன் இடத்தில்) கொடுக்கப்பட்ட ஒரு புது உடன்படிக்கை. இந்த புதிய உடன்படிக்கை கிறிஸ்துவின் பிரமாணம்; கிறிஸ்து சிலுவையிலே மரித்தபோது கொடுக்கப்பட்டது.

## மோசேயின் பிரமாணத்தின் நோக்கம்

மோசேயினுடைய பிரமாணத்தின் நோக்கம் என்ன என்பதை சில நிமிடங்கள் நாம் ஆராய்வோம். ஜனங்கள் அடிக்கடி கேட்கும் கேள்வி, 'எல்லா மனுஷர்களும் வாழ ஏதுவான ஒரே பிரமாணத்தை ஆரம்பத்திலேயே கொடுத்திருக்கலாமே? ஏன் முன்பதாக ஒரு பிரமாணத்தைக் கொடுக்க வேண்டும் ? பின்பு (அதற்குப் பதிலாக) அந்த இடத்தில் வேறொரு பிரமாணத்தைக் கொடுக்க வேண்டும் ?

பிரமாணத்தின் நோக்கங்களில் ஒன்று, பாவத்தின் கொடூரத்தை அறியப் பண்ணுவது; மனிதன் பாவத்தின் கொடூரத்தை குறைத்து மதிப்பிடக் கூடிய தன்மையுடையவன். அது எப்போதும் நம்மைச் சுற்றிலும் இருக்கிறபடியால், அது நமக்கு ஒரு பெரிய விபரீதமாக காணாவதில்லை, விசேஷமாக சில நேரங்களில் அவைகளை "சின்ன" பாவந்தானே. என்று அற்பமாக நினைத்துக்கொள்கிறோம். ஆனால் பரிசுத்தமுள்ள தேவனாலே, பாவத்துடன் ஐக்கியமோ, தொடர்போ வைக்க முடியாது.**ஆபகூக் 1:13ல்,** "தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணனே, அநியாயத்தை நோக்கிக் கொண்டிருக்க மாட்டீரே" என்றார். இப்படியாக, நியாயப்பிரமாணத்தின் ஒரு நோக்கம், பாவம் என்றால் என்ன? மற்றும், அதன் விபரீதம் எப்படிப்பட்டது? என்று மனுஷர்களை

உணர்ந்து கொள்ள உதவுகிறது. பவுல் **ரோமர் 3:20ல்,** "இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிராமணத்துக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை." மேலும் **ரோமர் 7:7ல்,** "... பாவம் இன்னதென்று நியாயப் பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றிமற்றபடி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே" என்று வாசிக்கின்றோம்.

நியாயபிரமாணத்தின் மற்றொரு நோக்கம், மனுஷர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வருவது. ஒரு கூட்ட ஜனங்களையும், தேசத்தையும், எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பைக் கொண்டு வரும்படி, வரவிருந்த இயேசு கிறிஸ்துவுக்காக ஆயத்தப்படுத்தும்படிநியாயப் பிரமாணம் வடிவமைக்கப்பட்டது; "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினலே நீதி மானாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவனிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே" **(கலாத்தியர் 3: 24–25).**

ஒரு உபாத்தி என்பவர் பள்ளிகூடத்திற்குப் பிள்ளைகளை அழைத்துக்கொண்டுபோய் ஆசிரியர் போதிக்கும்படி உதவி செய்பவர். பிள்ளைகள்மேல் அவர்களுடைய அதிகாரம் தற்காலிகமானது; பிள்ளைகளை வீட்டிலிருந்து அழைத்துக் கொண்டு வந்து, பள்ளியிலே விடுகிற நேரம் வரைக்கும்தான்; அதன்பின் பிள்ளைகள் ஆசிரியருடைய கட்டுபாட்டில் வந்துவிடுவார்கள். இப்படியாக, பழைய உடன்படிக்கை, நம்மை 'எஜமான் போதகராகிய இயேசுவினிடத்தில் கொண்டு வருவதற்காகதான். இந்த ஆலோசனையை **ரோமர் 10 :4ல்** பவுல் எழுதுகிறார், "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்."

நியாயப்பிரமாணத்தின் கடைசி ஒரு நோக்கமாக நாம் குறிப்பிடுவதென்றால், 'நியாயப்பிரமாணம் வருங்காரியங்களுக்கு (மேன்மையான காரியங்களுக்கு) நிழலாயிருந்தது.' எபிரெயப் புத்தகம் விசேஷமாக இந்தக் கருத்தைக் கொண்டு வருகிறது. "இப்படியிருக்க நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருடந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரே விதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்த மாட்டாது" **(எபிரேயர் 10 :1).** நிழலாயிருத்தல் என்பது ஒரு மரத்தின் நிழல் போன்றது. அது ஒரு

நிஜமான பொருளின் வடிவத்தை மங்கலான உருவமாகக் காட்டுகிறது; ஆனாலும் பலவகையிலும்ங நிஜத்தைவிட குறைவானதே. இப்படியாக மனுஷர்களுக்கு ஒரு பூரணப்பட்ட பலி செலுத்தப்படுவதைக் குறித்த அறிவைக் கொடுக்கும்படி நியாயப்பிரமாணம் வடிவமைக்கப்பட்டது; அது கிறிஸ்து நமது பாவங்களுக்காக தமது இரத்தத்தைக் கொடுத்தது.

நியாயப்பிரமாணம், மனுஷர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி திட்டமிடப்பட்டது. அது அவருடைய வருகையின் நோக்கத்தை நன்கு அறிந்து கொள்ளவும், நமக்கு ஏன் ஒரு இரட்சகர் தேவை என்பதை அறிந்து கொள்ளவும் உதவுகிறது. அடுத்த பாடத்தில், இயேசு கிறிஸ்துவின் வருகையினால் தேவன் மனிதனுடன் ஏற்படுத்தின உடன்படிக்கையை நாம் காண்போம்.

பெயர் ................................................ பதிவு எண் ................................

**கேள்விகள்**

1. இஸ்ரவேல் புத்திரருக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன ?

2. மோசேயின் பிரமாணம் யாருக்குக் கொடுக்கப்பட்டது ?

3. பாவத்துக்கும் தேவனுக்குமுள்ள உறவு என்ன ?

4. உபாத்தி என்றால் என்ன ?

5. நிழல் என்றால் என்ன ?

**உண்மை / தவறு**

1. இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளத் தயங்கினார்.

உண்மை / தவறு

2. மோசேயின் பிரமாணம் என்றென்றும் நித்தியமாக இருக்க வேண்டும் என்று தேவன் எண்ணினார்.

உண்மை / தவறு

3. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் நோக்கங்களில் ஒன்று, பாவத்தின் மனிதன் உணரவேண்டும் என்பதே!

உண்மை / தவறு

4. நியாயப்பிரமாணத்தின் நோக்கங்களில் ஒன்று, ஒரு பூரணப்பட்ட பலியைக் குறித்து மனுஷர்கள் அறிய வேண்டும் என்பது.

உண்மை / தவறு

5. பழைய உடன்படிக்கையின் கீழ் செலுத்தப்பட்ட பலிகள் பாவ மன்னிப்பை கொடுக்க வல்லதாக இருந்தது.

உண்மை / தவறு

# 3 கிறிஸ்துவின் பிரமாணம்
## THE LAW OF CHRIST

நியாயப்பிரமாணத்திற்கென்று ஒரு நோக்கமிருந்தது என்றும், அந்த நோக்கம் நிறைவேறின பிறகு அது கடந்து போகக்கூடியதாக இருந்தது என்றும் பார்த்தோம். **மத்தேயு 5:17,18**ல், இயேசு, "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." என்று சொன்னார். இயேசுவின் வார்த்தைகளுக்கு அநேகர் மாற்று விளக்கத்தைக் கொடுக்க விரும்புகின்றனர்; அதாவது அவர்கள், 'நியாயப்பிரமாணத்தை எடுத்துப் போடுவதற்கல்ல, (கைவிடுவது), அதை நிறைவு செய்வதற்கே இயேசு வந்தார் என்கின்றனர். சரி ஏதோ ஒன்றின் நோக்கம் நிறைவேறிவிடுமானால், அதை ஏன் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்க வேண்டும்?

இயேசு சொன்னதைக் கவனியுங்கள். அவர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுமளவும், நியாயப்பிரமாணத்தின் எந்த ஒரு பகுதியும் அழிந்து போவதில்லை; அப்படியானால், அது ஒரு முறை நிறைவேறிவிடுமானால், அது அழிந்து போகும் என்றே கூறுகிறார். இப்படியாக, இயேசு ஒரு முறை முற்றிலுமாக நியாயப் பிரமாணத்தை சிலுவையிலே நிறைவேற்றிவிடுவாரெனில், பிறகு நியாயப்பிரமாணம் அழிந்து போகும். இயேசு தாம் மரிப்பதற்கு சற்று நேரத்திற்கு முன்பாகத்தான், ஒரு எளிமையான வார்த்தையில், "எல்லாம் முடிந்தது" என்று சொன்னார் **(யோவான் 19:30).** இயேசு நிறைவேற்றும்படி வந்த சகல காரியங்களும் செய்து முடிக்கப்பட்டது: அவை நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவது, மனிதனுடைய பாவங்களுக்காக பாவபலியாவது, மேலும் ஒரு சிறப்பான, புது உடன்படிக்கையை ஸ்தாபிப்பது.

எப்படியிருப்பினும், நமக்கு ஒரு புதிய பிரமாணம் இருப்பதால், பழைய பிரமாணம் நமக்குப் பயனற்றது என நாம் நினைத்துவிடக்கூடாது. அது நமக்கு தொடர்ந்து சில அறிவுரைகளை கொடுக்கிறது. **ரோமர் 15:4**ல் பவுல், "தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது". அதாவது, நமக்குப் தேவனைக் குறித்தும், பாவத்தைக் குறித்தும், கிறிஸ்துவின் வருகை, பலிகள் போன்ற

அனைத்தையும் குறித்தும், பல வருடங்களுக்கு முன்பு யூதர்களுக்குப் போதித்தது போலவே நமக்கும் போதிக்கிறது. பழைய ஏற்பாடு இல்லாமல் புதிய ஏற்பாட்டின் அநேக பகுதிகளை நம்மால் புரிந்து கொள்ள இயலாது. இப்படியாக, இன்னமும் நாம் கற்றுக்கொள்வதற்கு பயனுள்ளதாயிருக்கிறது. ஆகிலும், நாம் என்ன செய்ய வேண்டுமென்றோ, தேவனுக்கு நாம் செய்கிற சேவையில் எவைகளைப் பயன்படுத்த வேண்டுமென்றோ எந்தவொரு அதிகாரத்தையும் பழைய ஏற்பாடு நமக்கு இன்று அளிப்பதில்லை. நாம் இனியும் பழைய பிரமாணத்தின் கீழ் இருப்பதில்லை; ஏனெனில், அது பழைய உடன்படிக்கையின் ஒரு பகுதி.

இயேசு, புதியதும் சிறந்ததுமான ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தும்படி வந்தார். இயேசு சிலுவையில் மரித்தபோது, பழைய பிரமாணத்தை அவர் சிலுவையில் ஆணியடித்தார் **(கொலோ 2:14)**. அதே வேளையில், அவர் ஒரு புதிய பிரமாணத்தை ஏற்படுத்தினார். "ஏனென்றால் எங்கே மரணசாசனமுண்டோ, அங்கே அந்த சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும். எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே. அந்தப்படி முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டைப் பண்ணப்படவில்லை," **(எபிரேயர் 9:16–18)**. எபிரேய எழுத்தாளர், கிறிஸ்து மரிக்க வேண்டியிருந்ததின் அவசியத்தைக் காட்டும்படி, ஒரு உதாரணமாக இதைப் பயன்படுத்துகிறார். மனிதர்கள் பெரும்பாலும், தனது மரணத்திற்குப் பின் ஆஸ்திகள் எப்படிப் பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமென குறிப்பிடும் பொருட்டு, ஒரு உயிலையோ அல்லது ஏற்பாட்டையோ எழுதி வைப்பார்கள். ஆகிலும் அந்த மனிதன் மரித்தாலொழிய அதற்கு மதிப்பில்லை; பின்னதாக (அவன் மரிக்கும் வரை) தான் விரும்பும் எந்த மாற்றத்தை வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் தனது உயிலின் முந்தின காரியங்களை எடுத்து விட்டு, புதிய மாற்றங்களை எழுதிக்கொள்ளலாம். அதேபோல்தான், கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை, அதை ஏற்படுத்திய அவருடைய மரணம் சம்பவிக்கும்வரை அமலுக்கு வரவில்லை. எப்படி மோசேயின் பிரமாணம் மிருக இரத்தத்தினால் பிரதிஷ்டை செய்யப்பட்டதோ, அதைப்போல இயேசு தமது புதிய உடன்படிக்கையை பிரதிஷ்டை செய்யும்படி தமது இரத்தத்தை அவர் சிந்தினார்; இப்படியாக, சிலுவையிலே புதிய உடன்படிக்கை ஸ்தாபிக்கப்பட்டது; அது பழைய பிரமாணத்திற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டது. இயேசு ஒரு மேலான உடன்படிக்கையினை உறுதி செய்பவரானார் **(எபிரேயர் 8:22)**

இந்த புதிய உடன்படிக்கை பழைய பிரமாணத்துடன் சேர்க்கப்பட்டதல்ல; இது அதற்குப் பதிலாக கொடுக்கப்பட்டது. புதிய உடன்படிக்கை என்று சொல்லப்படுவது என்பதே, பழையது ஒழிந்து விட்டது என்ற பொருளைக் கொடுக்கிறது. "புதிய உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழைமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது," **(எபிரேயர் 8:13)** "இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு (அவர்) முதலாவதை நீக்கிப் போடுகிறார்" **(எபிரேயர் 10:9).** இரண்டு உடன்படிக்கைகளுக்கும் நாம் கீழ்ப்படிய இயலாது. கடந்த பாடத்தில் நாம் பார்த்தபடி, நாம் இப்பொழுது கிறிஸ்துவுக்குக் கீழான விசுவாசத்தில் இருக்கிறோம், ஆதலால், இனியும் நாம் உபாத்திக்கு (ஆயாவுக்கு) கீழானவர்களல்ல; இந்த உபாத்தி, பழைய பிரமாணம் **(கலாத்தியர் 3:25):** நாம் புதியதைப் பெற்றும், மீண்டும் பழையதுக்குபோய் நம்மை இணைத்துக்கொள்ள விரும்பமாட்டோம்.

**கலாத்தியர் 5:4ல்,** "நியாயப்பிரமாணத்தினாலே நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும், கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" என்று பவுல் எழுதினார். நாம் கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்டவர்கள் **(எபேசி. 2:8),** இருந்தும் பழைய பிரமாணத்தைக் கைக்கொள்ள நாம் முற்படும்போது, நாம் கிருபையினின்று விழுந்து விடுகிறோம் என்று பவுல் திட்டவட்டமாக குறிப்பிடுகிறார்; ஆதலால், நமக்கு இரட்சிப்புக்கென இருக்கிற ஒரே வழியை இழக்க வேண்டியதாகிவிடும். ஒருவருடைய எதிர்பார்ப்பின்படி, இந்த புதிய பிரமாணம் பழையதைக்காட்டிலும் மிக அதிகமான மகிமையுள்ளதும், மேன்மையானதுமாகும். மோசேயின் மூலம் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோது, அது மிகவும் மகிமை நிறைந்ததாகத்தானிருந்தது; அவனுடைய மகிமையை இஸ்ரவேல் புத்திரரும் நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்தது **(2 கொரிந்தியர் 3:7).** "ஒழிந்து போகிற மகிமையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்?" **(II கொரி 3:8).** இந்த வசனப் பகுதியில், ஒழிந்து போகிற ஊழியம் என்பது கற்பனைகளில் எழுதப்பட்ட ஊழியம்; அதாவது, பத்து கட்டளையாகும். மேலும் **எபேசியர் 2:15ல்,** "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷராக சிருஷ்டித்து இப்படிச் சமாதனம் பண்ணி," என்று பவுல் அறிவித்தார். இரண்டு வசனப் பகுதிகளிலும் கவனித்துப் பார்ப்போமானால், பழைய பிரமாணம் ஒழிக்கப்பட்டது அல்லது

அழிக்கப்பட்டது என்பதற்கான தெளிவான வாக்கியத்தைக் காணுகிறோம்; இது பத்துக்கட்டளைகளையும் உட்படுத்தியது.

குறைவுள்ளதாக ஒரு நியாயப்பிரமாணத்தை, அதுவும் தேவையான பாவமன்னிப்பைக் கொடுக்கக்கூடாத பிரமாணத்தை, தேவன் கொடுக்கவேண்டிய அவசியமென்ன? நியாயப்பிரமாணம் தன்னில் தானே குறைவுள்ளதல்ல; அது எதற்காகத் திட்டமிடப்பட்டதோ அதைச் செய்தது, அது பாவத்தைக்குறித்த மனசாட்சியையும், மனுஷர்களை கிறிஸ்துவிடம் வழி நடத்தவும் ஆகிய கிரியைகளைச் செய்தது. நியாயப்பிரமாணத்தில் பிரச்சனை இல்லை; பிரச்சனையெல்லாம் பெலவீனமும் பாவமும் நிறைந்த மனுஷன்தான்; அவனால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளக் கூடாதிருந்தது.

பழையபிரமாணம் எடுக்கப்பட்டு போனபடியால், இன்று நம்முடைய மார்க்கம் சம்மந்தப்பட்ட காரியங்களுக்காக, பழைய பிரமாணத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களுக்கு நாம் மறுபடியும் போக இயலாது. பத்து கட்டளைகள் உட்பட நியாயப்பிரமாணத்தின் எந்தப்பகுதியும் இன்று அமலில் இல்லை. இன்று மார்க்க சம்பந்தமான அநேக செயல்பாடுகள், அதிகாரம் இல்லாமல் (அங்கீகரிக்கப்படாமல்) செய்யப்படுகின்றன; ஏனெனில், அவர்களின் செயல்களுக்கு பழைய ஏற்பாடு மட்டுமே அங்கீகாரமளிக்கிறது. இதில் ஆசாரியத்துவம் (பாதிரியார்களின் ஆசரிப்பு முறை), தசமபாகம், ஏழாம்நாள் ஆசரிப்பு மற்றும் இசைக்கருவிகளின் பயன்பாடு ஆகியன உட்பட்டவை. இதனால்தான் கால்நடைகளை இன்று பலியிடுவதில்லை. நாம் விரும்புகிற எந்த கட்டளையை புதிய உடன்படிக்கைக்குள் கொண்டு வருவது என்று தெறிவு செய்து நாம் செயல்பட முடியாது. அப்படிப்பார்த்தால், நாம் ஒரு கட்டளையை கைக்கொண்டாலும், முழுப்பிரமாணத்தையும் கைக்கொள்ள கடனாளிகளாயிருக்கிறோம் **(கலா 5:3).** நாம் பழைய ஏற்பாட்டின் எந்த ஒரு பிரமாணத்தையும் கைக்கொள்ள நாம் விரும்பக்கூடாது; ஏனெனில், புதிய பிரமாணமே மிகவும் உயர்ந்ததாயிருக்கிறது. அடுத்தப் பாடத்தில், அந்த உயர்வான காரியங்களில் சிலவற்றை விவாதிப்போம்!

பெயர் ............................................ பதிவு எண் ............................................

**கேள்விகள்**

1. நியாயப்பிரமாணம் எப்பொழுது அழிந்து போகும் என்று இயேசு சொன்னார் ?

2. "எல்லாம் முடிந்தது" என்று இயேசு, என்ன அர்த்தத்தில் சொன்னார் ?

3. ஒருவனுடைய உயில் எப்பொழுது உயிர் பெறும் ?

4. இயேசுவின் உயில் (சாசனம்) எப்பொழுது அமலுக்கு வந்தது ?

5. மோசேயின் பிரமாணம் எப்படிப்பட்ட மகிமை உடையதாயிருந்தது ?

6. இன்றைய மார்க்க உலகில் செய்யப்படுகிற பழைய ஏற்பாட்டில் மட்டுமே காணுகிற சிலவற்றைக் குறிப்பிடுக ?

7. பழைய உடன்படிக்கையிலிருந்து வித்தியாசமாக நாம் செய்கிற, புதிய ஏற்பாட்டு காரியங்களில் சிலவற்றைக் கூறுக ?

**உண்மை / தவறு**

1. நாம் இனியும் பழைய பிரமாணத்தின் கீழ் வாழ்வதில்லையாதலால், அந்தப் பிரமாணம் இன்று நமக்கு குறைவான மதிப்பே உடையது.

உண்மை / தவறு

2. சிலுவையிலே பழைய உடன்படிக்கைக்குப் பதிலாக புதிய உடன்படிக்கை கொடுக்கப்பட்டது.

உண்மை / தவறு

3. புதிய உடன்படிக்கை என்று ஒன்று இருப்பதாலேயே, பழைய உடன்படிக்கை ஒழிந்து போயிற்று என்பது உண்மையாயிருக்கிறது.

உண்மை / தவறு

4. சிலுவையிலே ஒழிக்கப்பட்ட நியாயப் பிரமாணத்தின் ஒரு பகுதியாக பத்துக் கட்டளை இல்லை.

உண்மை / தவறு

5. பழைய பிரமாணத்தில் காணும் ஒரே தவறு மனிதன் பெலவீனப்பட்டவனானபடியால், பழைய பிரமாணத்தைக் கைகொள்ள முடியாமல் போனதுதான்.

உண்மை / தவறு

# 4 புதிய உடன்படிக்கையின் மேன்மை

## SUPERIORITY OF THE NEW CORENANT

புதிய உடன்படிக்கை, பழைய உடன்படிக்கையிலிருந்து அநேக வழிகளில் மேன்மையுள்ளதாயிருக்கிறது; ஆனாலும் அவையெல்லாவற்றையும் முழுமையாய் நாம் விவாதிக்க இயலாது. எபிரெய எழுத்தாளர் இந்த காரியங்களைக் குறித்து சிறப்பான விவாதத்தை முன்வைக்கிறார். எனவே, அவர் குறிப்பிடும் வித்தியாசங்களில் சிலவற்றைப் பார்ப்போம்

### .மேன்மையான ஆசாரியத்துவம்

பழைய உடன்படிக்கை, ஜனங்களினிமித்தம் பலிகளைச் செலுத்தும்படியான, ஆசாரியத்துவத்தை உடையதாக இருந்தது. ஜனங்கள் நேரடியாக தேவனிடத்தில் அணுக அனுமதிக்கப்படவில்லை; மாறாக, அவர்கள் தங்களுடைய பலிகளையும் காணிக்கைகளையும் ஆசாரியர்களிடம் கொண்டு வரவேண்டும்; ஆசாரியர்கள் அவைகளைத் தேவனிடத்தில் செலுத்துவார்கள். இந்த ஆசாரியர்கள் லேவிக் கோத்திரத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள்; அதில் பிராதன ஆசாரியர்கள் ஆரோனின் சந்ததியிலிருந்து அபிகேம் பண்ணப்படுவார்கள் இந்த ஆசாரியர்களெல்லாரும் சாதரணமான மனுஷர்கள்; எனவே அவர்களிடத்திலும் தவறுதல்களும் பெலவீனங்களும் இருந்தன. தாங்களும் மனுஷர்களானதால், பிற மனுஷர்களுக்காகப் பரிதபிக்கும்படி அனுமதிக்கப்பட்டார்கள். **எபிரேயர் 5:2,3ல்** நாம் வாசிக்கிறோம், ''தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே அறியாதவர்களுக்கும், நெறிதப்பிப் போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான். அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிட வேண்டியது போல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிடவேண்டியதாயிருக்கிறது.'' ஆசாரியன் மற்றவர்களைப் போலவே பாவமுள்ளவனானபடியால், முதலாவதாக அவன் தனக்காகவும் பலி செலுத்த வேண்டும்; பிறகு அவன் மற்றவர்களுக்காகப் பலி செலுத்த வேண்டும்.

புதிய உடன்படிக்கையின் கீழ் மிக மிக மேலான பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார். "வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக் கடவோம். நம்முடைய

பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் **(எபிரேயர் 4:14–16).** நம்முடைய பெலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக் கூடிய பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார்; ஏனெனில், அவர் மனுஷனாக வந்து நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார். ஆகிலும் அவர் ஒரு போதும் சோதனையில் விழுந்து போகவில்லை ; ஒரு போதும் அவர் பாவஞ் செய்யவுமில்லை; "பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" **(எபிரேயர் 7:26)** இப்படியாக, அவருடைய ஆசாரியத்துவம் பழைய ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் மிகவும் மேன்மையானது.

மேன்மையான வாக்குத்தத்தங்கள்! இந்தப் புதிய உடன்படிக்கை, உள்ளானதும் ஆவிக்குரியதுமாகும். "...என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்..." **(எபிரேயர் 8:10).** முதலாம் உடன்படிக்கை கற்பலகைகளில் எழுதப்பட்டது; ஆனால் புதிய உடன்படிக்கை நம்முடைய இருதயங்களில் எழுதப்பட்டது. தேவன் நேரடியாக வேத வசனங்களை நம்முடைய இருதயங்களில் வைக்கிறார் என்பது இதன் பொருளல்ல. வேதத்தை வாசிப்பதிலிருந்தும் போதிக்கப்படுவதிலிருந்தும் நமக்கு அறிவு வருகிறது. "எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே," **(யோவான் 6:45)** நாம் தொடர்ந்து தேவனுடைய வசனத்தைக் கேட்கவும் கற்கவும் வேண்டும் என்பதை கவனியுங்கள். ஆனால் இப்பொழுது வசனம் நம்முடைய இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறது. பழைய உடன்படிக்கையின்கீழ் ஒருவர் மாம்சரீதியாகப் பிறந்து, அதன் தேவைகளுக்குரியவராக வாழ்ந்தார். பின்னதாக தேவனைக் குறித்துப் போதிக்கப்பட்டார். இப்பொழுது, ஒருவர் கற்று தேவனுக்குத் தன்னை இருதயப்பூர்வமாகக் கீழ்ப்படுத்தி, பிறகு அவர் தேவனுடைய ராஜ்யத்துக்குரிய பிரஜையாகிறார். தேவனுடைய வசனத்தின் அர்த்தங்கள் ஒருவருடைய இருதயத்தில் எழுதும்வரை, அது அவருக்கு பலனற்றதாகிறது.

இப்பொழுது நமக்கு தேவனோடு நெருங்கிய நட்புறவு உள்ளது. "நான் அவர்கள்

தேவனாயிருப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்." **(எபிரேயர் 8:10).** இவைகளெல்லாம் புதிய வார்த்தைகளல்ல, அவைகள் லேவியராகமம் 26: 12 லும் காணப்படுகின்றன. இருப்பினும், இப்பொழுது இதற்கு மிக முழுமையான அர்த்தம் இருக்கிறது. பழைய உடன்படிக்கை உண்மையில் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்குமிடையே மிகப்பெரிய இடைவெளியை ஏற்படுத்தியிருந்தது. இது தேவாலயத்திற்கும் ஆசாரியத்துவத்துக்கும் இடையிலிருந்த திரைச்சீலை மூலம் விளக்கப்படுத்தப்பட்டது. இப்பொழுது எல்லாருமே நேரடியாக தேவனை அணுகமுடியும். சகல கிறிஸ்தவர்களுமாகிய ஆண்களும், பெண்களும், சகல தேசத்தார்களும், பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்திற்கு சமமானவர்கள்."கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" **(பிலிப்பியர் 4:5).** "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் நமக்குக் கிடைக்கும்" **(பிலிப்பியர் 4:7).** "அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டுவதில்லை." **(எபிரேயர் 8:11).** ஏற்கனவே நான் குறிப்பிட்டபடி, பழைய பிரமாணத்தின் கீழ் ஒருவர், பழைய உடன்படிக்கைக்குரிய மாம்சத்தின்படி பிறக்கிறார். பின்னர் அவனுக்கு அந்த உடன்படிக்கைக்குரிய விதிமுறைகள் கற்பிக்கப்படும். அநேகருக்கு அது, ஒரு குடும்பரீதியிலான அல்லது தேசீயரீதியிலான பழக்கமாகிவிடும்; ஒரு தனி நபரின் ஒப்புக் கொடுத்தலாக இருக்காது. அநேகர் ஒருபோதும் கற்றறியாமல் தேவனுடைய போதனைகளைத் தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். புதிய உடன்படிக்கையில் நாம் ஆவிக்குரிய பிறப்பை அடைவதன் மூலம், உடன்படிக்கைக்கு உட்படுத்துவதற்கு முன்பாகவே தேவனை அறிந்து கொள்கிறோம். மேலும் புதிய உடன்படிக்கை, சகல தேசத்தாரிலும் இருக்கிற சகல மனுஷருக்கும் உரியதாயிருக்கிறது. பழைய உடன்படிக்கையோ இஸ்ரவேலர்களுக்கு மட்டுமே உரியதாயிருக்கிறது. "ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்," **(எபிரேயர் 8:12).** "அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே." **(எபிரேயர் 10:4).** பழைய பிரமாணத்தின் கீழ் பலிகளின் இரத்தம் "உலகத்தின் பாவங்களை சுமந்துதீர்க்கிற தேவாட்டுக்குட்டி"யைச் சுட்டிக்காட்டக் கூடியதாயிருந்தது **(யோவான் 1:29).** பழைய ஏற்பாட்டு பலிகள் நினைவுகூருதலைக் கொண்டுவந்தது;

முழுமையான பாவ நிவர்த்தியை கொண்டு வரவில்லை **(எபிரேயர் 10:3).** ஆகிலும் கிறிஸ்துவுக்குள், தேவன் பாவங்களை நினைப்பதில்லை. இயேசு தம்மைத்தாமே, ஒரு பூரணமான பலியாக அளித்தார். "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும் படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" **(எபிரேயர் 9:28).** "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" **(எபிரேயர் 10:10).** சகல மனுஷருக்கும் சதாகாலத்துக்குமான பலியை இயேசு அளித்திருக்கிறார். கால்நடைகளை பலியிட்டதுபோல மறுபடியும் மறுபடியும் அது (இயேசுவின் பலி) செலுத்தப்பட வேண்டியதில்லை.

## முடிவுரை

நாம் பார்த்தபடி, பழைய உடன்படிக்கையைக் காட்டிலும் இந்த புதிய உடன்படிக்கையில் அநேக அனுகூலங்கள் (சாதகங்கள்) காணப்படுகின்றன. வேறு சில காரியங்களையும் குறிப்பிடலாம்; ஆகிலும், கிறிஸ்துதான் மேலான ஒரு உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராய் இருக்கிறார் என்று சுட்டிக்காட்ட இது போதுமானது. நம்மிலே ஒவ்வொருவரும் இந்தப் புதிய உடன்படிக்கைக்கு உரியவர்கள் என்பதையும், வேறெதெற்காகவும் இந்த உடன்படிக்கையை விட்டுவிலாகாதிருக்க வேண்டியதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தப் புதிய உடன்படிக்கைக்குள் வர தேவையான கட்டளைகள் எளிமையானது; கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தலும் அந்த விசுவாசத்தை அறிக்கையிடுதலும் **(ரோமர் 10:9–10):**அத்துடன், நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்புதல் மற்றும் பாவ மன்னிப்பிற்கென்று கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுதல் **(அப்போஸ்தலர் 2:36–39).** ஆகியனவும் அடங்கும்.

பெயர் ........................................................................................ பதிவு எண் ..................................................

**கேள்விகள்**

1. பழைய உடன்படிக்கையின் கீழ் எந்தக் கோத்திரத்திலிருந்து ஆசாரியர்கள் நியமிக்கப்பட்டனர் ?

2. பழைய உடன்படிக்கையின் கீழ் இருந்த பிரதான ஆசாரியனைக் காட்டிலும் இயேசு எப்படி மேலான பிரதான ஆசாரியராயிருக்கிறார் ?

3. தேவனுடைய வசனம் இப்பொழுது அவருடைய ஜனங்களின் ...................................ளும்...........................ளும் எழுதப்பட்டுள்ளது ?

4. பழைய உடன்படிக்கையின் மிருக பலிசெலுத்துதலின் இரத்தம் எதைச் சுட்டிக்காட்டியது ?

5. எதன் மூலம் இன்றைக்கு நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம் ?

**உண்மை / தவறு**

1. பழைய உடன்படிக்கையின் ஆசாரியர்கள் நம்மைப் போலவே இருந்ததால், அவர்கள் மேலானவர்கள்.

உண்மை / தவறு

2. இயேசு நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக் கூடும்; ஏனெனில், அவர் நம்மைப் போலவே வாழ்ந்தார்.

உண்மை / தவறு

3. இந்த உடன்படிக்கை உள்ளானதும் ஆவிக்குரியதுமாகும்.

உண்மை / தவறு

4. பழைய உடன்படிக்கையின் பிரஜைகளாக இருக்க ஒரே வழி, மாம்சப் பிரகாரமாக அதற்குள் பிறப்பது தான்.

உண்மை / தவறு

5. புதிய உடன்படிக்கையின் கீழ் அந்த உடன்படிக்கைக்கு கீழானவர்களாக மாறுவதற்கு முன்பே, நாம் தேவனை அறிந்து ஆவிக்குரிய பிறப்பை அடைகிறோம்.

உண்மை / தவறு

# இரண்டு உடன்படிக்கைகளின் ஒப்பீடு

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| முதலாவது, எபி. 10:9 | இரண்டாவது, எபி. 10:9 |
| பழையது, எபி. 8:13 | புதியது, எபி. 8:13 ; 9:15 |
| பூமியிலே பிரதான ஆசாரியன், எபி. 5:1; 7:23 | பிரதான ஆசாரியர் 'பரலோகில்', எபி. 8:1 |
| லேவி கோத்திரத்திலிருந்து ஆசாரியன் எபி. 7:11 | யூத கோத்திரத்திலிருந்து பிரதான ஆசாரியர், எபி. 7:13-14 |
| ஆசாரியன் மரித்தான், எபி. 7:23 | பிரதான ஆசாரியர் என்னென்றும் உயிரோடிருப்பவர், எபி. 7:24. |
| சட்டத்தை பெற்றுக்கொடுத்ததவர் : மோசே, மல்கியா 4:4 | சட்டத்தைக் கொடுத்தவர் : இயேசு கிறிஸ்து, யாக் 4:12 |
| மத்தியஸ்தர் : மோசே, யாத். 20:19 | மத்தியஸ்தர் : இயேசு கிறிஸ்து எபி. 9:15 ; 12:24 |
| குறைவான உடன்படிக்கை, எபி. 8:7 | மேன்மையான உடன்படிக்கை, எபி. 8:6 |
| குறைவுள்ள வாக்குத்தத்தங்கள், எபி. 8:6 | மேன்மையான வாக்குத்தத்தங்கள், எபி. 8:6 |
| பூரணமற்ற, திரும்ப திரும்ப செய்யப்பட்ட பலிகள், எபி. 9:9; 10:1-4 | ஒரே பூரணமான பலி, எபி. 9:12 |
| மிருக இரத்தம், எபி. 10:4 | கிறிஸ்துவின் இரத்தம், எபி. 9:12 |
| பாவ மன்னிப்பில்லை எபி. 10:4,11 | பாவ மன்னிப்பு உண்டு, எபி. 9:15 ; அப் 13: 38 |
| மிருக இரத்தத்தினால் பிரதிஷ்டை செய்யப்பட்டது, எபி. 9:19 | கிறிஸ்துவின் இரத்தத்தினால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. எபி. 9:18-28 |

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| பாவங்கள் உண்டென்ற மனசாட்சி, எபி. 10 : 1-3 | பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்னும் மனசாட்சி, எபி. 9:14; 1 பேதுரு 3:21 |
| தேவனிடம் சேரும் தைரியமில்லாமை | தேவனிடம் சேரும் தைரியம், எபி. 10:19 |
| ஒரே ஒரு தேசத்திற்காக, மல். 4:4 | எல்லா தேசத்தாருக்கும், மத். 28:19-20 |
| தற்காலிகமானது, கலா. 3:19 | இறுதியான, நிரந்தரமான உடன்படிக்கை, கலா. 1:6-9 |
| மாம்சப்பிரகாரமானது, எபி. 9:10 | ஆவிக்குரியது, யோ. 4:23-24 |
| நிழல் மற்றும் சாயல், எபி. 9:24; 10:1 | நிஜம், எபி. 8:1-5 |
| மாம்ச சுத்திகரிப்பு, எபி. 9:13 | ஆத்துமாவை சுத்தப்படுத்துகிறது, 1 பேதுரு 1:22 |
| மகிமையானது, 1 கொரி. 3:9-10 | அதிக மகிமையானது, 1கொரி. 3:9-10 |
| கற்பலகையில் எழுதப்பட்டது, 1 கொரி. 3:7 | இருதயத்தில் எழுதப்பட்டது, எபி. 8:10 |
| ஒழிந்து போயிற்று, 2கொரி. 3:11 | நிலைநிற்கிறது, 2 கொரி. 3:11 |
| நீக்கிப்போடப்பட்டது, எபி. 10:9 | நிலைநிறுத்தப்பட்டது, எபி. 10:9 |
| ஒழித்துப்போடப்பட்டது, எபே. 2:15 | நிரந்தரமானது, யோ. 12:48 |
| இதினின்று விடுதலையாக்கப்பட்டோம், ரோ. 7:6 | ஒரே தரம் எல்லாருக்காகவும், யூதா 3 |
| குலைத்துப்போடப்பட்டது, கொலே. 2:14 | வேரூன்றி நிற்கின்றது, கொலே. 1:23 |

**அட்டவணை தயாரித்தவர், லூயிஸ் ரஷ்மோர்** (LOUIS RUSHMORE)

# 5 இரண்டு ஸ்திரீகளும் இரண்டு பிரமாணங்களும்

## TWO WOMEN AND TWO LAWS

இரண்டு உடன்படிக்கைகளைக் குறித்து ஒரு முழுமையான விளக்கமளிக்கும் விதமாக, பவுல், ஆகார் மற்றும் சாராள் ஆகியோரின் பெயர்களை இரண்டு ஸ்திரீகளாக ஒப்பிட்டு, **கலாத்தியர் 4: 21–5 : 1ல்** விவரிக்கிறார். இந்த பாடத்தில் இந்த வசனங்களில் சொல்லப்பட்டுள்ள ஞான அர்த்தத்தைப் பார்த்து, நம்மில் ஒவ்வொருவரும் ஒரு சரியான புரிந்து கொள்ளுதலுக்கு வர வேண்டுமென நான் விரும்புகிறேன். முதலாவதாக, நாம் வசனப்பகுதியைக் கவனிக்க வேண்டும். கலாத்தியர் புத்தகம், தங்களுக்கு பரிச்சயமாகியிருந்த காரியங்களுக்கு, அதாவது நியாயப்பிரமாணத்துக்குத் திரும்பும்படி சோதிக்கப்பட்ட யூதர்களுக்கு எழுதப்பட்டது. யூதர்கள் தாங்களே மாம்சரீதியிலான ஆபிரகாமின் சந்ததி என்பதில் பெருமைபட்டுக்கொண்டிருந்தனர்; ஆதலால், தான் அவர்கள் நியாயப்பிரமாணம் சம்பந்தமான தேவனுடைய வாக்குத்தத்தங்களும் ஆசீர்வாதங்களும் தங்களுக்கே உரியது என்ற நினைவில் இருந்தனர்.

ஆகிலும், ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர்கள் இருந்ததை பவுல் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். ஒருவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தவன்; மற்றொருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன். ஒருவன் ஆசீர்வாதங்களைப் பெற்றவன், மற்றொருவனுக்குக் கொடுக்கப்படவில்லை. இப்படியாக, ஆபிரகாமின் மாம்ச சந்ததியாராக இருப்பது மாத்திரம் தேவனுடைய ஆசீர்வாதங்களை பெறுவதற்கான ஒரு உத்ரவாதம் அல்ல கொடுக்கப்பட்டுள்ள இந்த உதாரணத்தில், ஆகார் சீனாய் மலைக்கு மாதிரியானவள்; இங்கேதான் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. இஸ்மவேல் யூதர்களின் தேசத்தைக் குறிப்பிடுகிறது; அது பூமிக்குரிய ஆராதனையின் மையமாயிருந்த எருசலேமுடன் சேர்த்து பேசப்படுகிறது. சாராள், கல்வாரி நிகழ்ச்சிகளைக் கொண்ட புதிய உடன்படிக்கையை குறிப்பதற்கு மாதிரியானவள்; மற்றும் ஈசாக்கு, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, புதிய உடன்படிக்கையின் அங்கத்தினர்களாயுள்ள ஒவ்வொருவரையும் குறிப்பிடுகிறது.

### பிறப்பு

இஸ்மவேல் சாதாரணமான முறையில் பிறந்தவன். தேவனுடைய

வல்லமையை சாராமல், தேவனுடைய வாக்குத்தத்தத்தை அவர் நிறைவேற்றும்படி அவருக்கே உதவி செய்ய ஆபிரகாம் முயன்றபோது இஸ்மவேல் பிறந்தான். அவனுடைய பிறப்பு சம்பந்தமான எந்தவொரு வாக்குத்தத்தமும் செய்யப்படவில்லை. இஸ்ரவேல் தேசம் மாம்சத்தின்படியான குமாரன், மேலும் அந்நாட்டுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களெல்லாம் பெரும்பகுதி மாம்சப்பிரகாரமானது. பழைய உடன்படிக்கையின்படி (அதற்குள்) பிறந்தவன். மாம்ச மற்றும் இரத்தத்தின் வம்சாவழியில் அதற்குள் இருக்கிறார்கள் .

இன்னொருபுறம், ஈசாக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட ரீதியில் பிறந்தவன். அவனுடைய தாய், ஆபிரகாமின் மனைவி சாராள். அவனுடைய பிறப்பும் இயற்கையாக இருந்த போதிலும், தேவன் அப்பிறப்பில் இடைபட்டு அதை சாத்தியமாக்கினார். அவனுடைய பிறப்பு, தேவனுடைய வாக்குத்தத்தத்தின் விளைவும், விசுவாசத்தின் சந்ததியுமாகும். ஈசாக்கின் சந்ததிகள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை பெற்றவர்கள்; அவைகள் பெரும்பாலும் ஆவிக்குரியனவாயிருந்தன. ரோமர் புத்தகத்தில், பவுல் அடிக்கடி ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கும் மாம்சப்பிரகாரமான இஸ்ரவேலருக்குமிடையே உள்ள வித்தியாசத்தைக் குறிப்பிடுகிறார். ஈசாக்கு ஆவிக்குரிய இஸ்ரவேலர்களை அடையாளப்படுத்துகிறான், அவர்கள் புதிய பிறப்பின் மூலம் ஆவிக்குரிய பிறப்பைப்பெற்றவர்கள். “அவர்கள், இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷருடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்,” **(யோவான் 1:13).** நிக்கொதேமு இயேசுவினிடத்தில் வந்தபோது, அவனிடம் இயேசு மறுபிறப்பைக் குறித்துப் பேசி, ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்றும், அது ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறப்பதென்றும் அறிவுறுத்தினார். **(யோவான் 3:3–5).** இப்படியாக, இந்தப் பிறப்பு பழைய உடன்படிக்கையின் மாம்சப் பிறப்புக்கு முரணானதாக இருக்கிறது.

### அவர்கள் வாழ்ந்த நிலைமை

ஆகாரும் இஸ்மவேலும் அடிமையானவர்கள். அவர்கள் சீனாய் மலையில் கொடுக்கப்பட்டப் பிரமாணத்துக்கு அடையாளமானவர்கள்; அதாவது பத்துக்கட்டளை பிரமாணத்திற்கு முன்மாதிரியானவர்கள். இந்த உடன்படிக்கை ஒரு நுகத்தடியாக, அவர்களின் முற்பிதாக்களால் சுமக்கக் கூடாததாயிருந்தது என்று குறிப்பிடப்பட்டது.

நாம் பழைய பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கும் காலம்வரை, நாம் பாவத்துக்கும் இந்த உலகத்திற்கும் அடிமைப்பட்டிருக்கிறோம்.

சாராளும் ஈசாக்கும் சுதந்தரவாளிகள். எருசலேமில் கிறிஸ்து நமக்கு அளித்த உடன்படிக்கை நம்மையும் சுதந்தரவாளியாக்குகிறது. "கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்" **(கலாத்தியர் 5 : 1 ).** கிறிஸ்துவுக்குள் நாம் மோசேயின் பிரமாணத்தினின்று விடுதலைப்பெற்று, சுதந்தரவாளிகளாயிருக்கிறோம், ஆனாலும், வேறு எந்த பிரமாணத்திலிருந்தும் விடுதலை பெற்றவர்களல்ல. இப்பொழுது நாம் கிருபையினாலே தேவனுக்கு ஊழியஞ்செய்ய சுதந்திரம் பெற்றிருக்கிறோம், பிரமாணத்தினாலே அல்ல.

## இரண்டு குமாரர்களின் ஆவி

இஸ்ரவேல் அடிமைத்தனத்துக்குரிய உபத்திரவப்படுத்தும் ஆவியைப் பெற்றிருந்தான். ஈசாக்கு பால் மறக்கடிக்கப்பட்ட வேளையில், இஸ்மவேல் ஈசாக்கை பரியாசம் பண்ணி உபத்திரவப்படுத்தினான். இந்த சம்பவம், பிந்தைய ஆவிக்குரிய இஸ்ரவேலாகிய சபைக்கு ஒரு அர்த்தங்கொடுக்கக்கூடியதாயிருந்தது. யூதர்கள்தான், கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் பெரும்பாலான உபத்திரவத்தைக் கொடுத்தனர்.

ஈசாக்கு பாடுகளைச் சகிக்கக் கூடியவனாகவும், தாழ்மையும் ஆவிக்குரிய இருந்தான். கிறிஸ்துவின் சபை ஆரம்பமானது முதலே, யூத மதத் தலைவர்களின் உபத்திரவம் இருந்தது. "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." **(2 தீமோத்தேயு 3:12).** பவுல் கலாத்தியர்களிடம், இந்த யூத மத போதகர்கள்தான் அவர்களுடைய உண்மையான எதிரிகள் என்பதைக் காண வேண்டும், என விரும்பினார்.

## இறுதி முடிவு

இஸ்மவேல் சுதந்திரவாளியல்ல; அடிமைக்குரிய பங்குக்கு மட்டுமே அவன் உரிமையளிக்கப்பட்டவன். இஸ்மவேல் ஈசாக்கை பரியாசம் பண்ணின போது, சாராள் அவற்றைக் கவனித்துப் பார்த்து, ஆகாரையும் அவளுடைய குமாரனையும் புறம்பே

தள்ளும்படி ஆபிரகாமைச் சம்மதிக்கப் பண்ணினாள். இஸ்மவேல் புறம் தள்ளப்பட்டான்? ஏனெனில், அவன் ஈசாக்கோடே பங்காளியாக இருக்க முடியாது. பழைய உடன்படிக்கை எடுபட்டுப்போயிற்று என்பது இதன் பொருள். இஸ்ரவேலரின் ஆசீர்வாதங்கள் எல்லாம் பூமிக்குரிய கானான் மட்டும் தான். அவர்கள் நித்திய இரட்சிப்பை அடையக்கூடும்; ஆகிலும், அது பழைய ஏற்பாட்டின் சட்டத்தின் ஒரு பகுதியல்ல. நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வதினால் அவர்களுக்கு இரட்சிப்பு வருவதில்லை.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனாகிய ஈசாக்கு மட்டுமே ஆபிரகாமின் ஆஸ்திகளுக்கு சுதந்திரவாளி. இது கிறிஸ்துவுடனே கூட உடன் பங்காளியாயிருக்கிற சபையை அடையாளப்படுத்துகிறது. "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூட பாடுபட்டால் அப்படியாகும்.'' **(ரோமர் 8:17).** கிறிஸ்தவர்களாகிய நாம் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். "இப்படியிருக்க, சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம். ஆன படியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்தடிக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்" **(கலாத்தியர் 4:31 – 5:1).**

## முடிவுரை

இரண்டு உடன்படிக்கைகள் கொடுக்கப்பட்டன. பழைய உடன்படிக்கை, மோசே மூலமாக சீனாய் மலையில் கொடுக்கப்பட்டது; மற்றும், புதிய உடன்படிக்கை கிறிஸ்துவால் சிலுவையிலே அமல்படுத்தப்பட்டது. புதிய உடன்படிக்கை பழையதின் இடத்தில் கொடுக்கப்பட்டது; எனவே, மீண்டும் பழைய பிரமாணத்துக்குக் கீழ் போவது கிருபையிலிருந்து விழுந்து போதல் ஆகும் **(கலாத்தியர் 5:4).** நாம் இரண்டையும் கைக்கொள்ள இயலாது. கிறிஸ்துவோடும் அவருடைய பிரமாணத்தோடும் எதையாகிலும் சேர்ப்பது, அது "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்துடன்" சேர்ப்பது ஆகும் **(யாக்கோபு 1:25),** மேலும், அப்படிச்செய்வது கிறிஸ்துவை மட்டுப்படுத்துவதும், அந்த உடன்படிக்கையின் சேர்ந்த ஆசீர்வாதங்களை இழந்து போவதுமாகும்.

பெயர் ........................................ பதிவு எண் ........................................

**கேள்விகள்**

1. தேவனுடைய வாக்ககுத்தத்தங்களும் ஆசீர்வாதங்களும் தங்களுடையதே என்று யூதர்கள் மிகவும் நம்பிக்கையாயிருக்கக் காரணம் என்ன ?

2. ஆகாரும் இஸ்மவேலும் எதை அடையாளப் படுத்துகின்றனர் ?

3. இந்த உதாரணத்தில் ஈசாக்கின் சந்ததிகள் யார் யார் ?

4. கிறிஸ்துவுக்குள் விடுதலையாக்கப்பட்டோம் என்பதன் பொருள் என்ன ?

5. இஸ்மவேல் புறம்பே தள்ளப்பட்டதன் பொருள் என்ன ?

**உண்மை / தவறு**

1. ஈசாக்கின் பிறப்பு இயற்கையானது; ஆனாலும், தேவனுடைய வல்லமையினாலே இயற்கைக்கு அப்பாற்பட்ட தன்மையில் செயலாக்கப்பட்டது.

உண்மை / தவறு

2. ஆரம்பத்தில் ரோம சாம்ராஜ்யமே, சபையை மிக அதிகமாய் உபத்திரவப்படுத்தியது.

உண்மை / தவறு

3. மாம்ச இஸ்ரவேலர்களின் ஆசீர்வாதங்கள் கானான் தேசத்திற்கு உட்பட்டது மட்டுமே!

உண்மை / தவறு

4. ஈசாக்கின் ஆவிக்குரிய சந்ததியாகிய கிறிஸ்தவர்கள், இப்பொழுது கிறிஸ்துவுடனே கூட உடன் சுதந்திரராக இருக்கிறார்கள்.

உண்மை / தவறு

5. நாம் உண்மையாகவே தேவனுடைய ஊழியக்காரர்களாக இருப்பின், நாம் அதிகமாக உபத்திரவங்களை சந்திக்க வேண்டுவதில்லை.

.

உண்மை / தவறு

# 6 புதிய உடன்படிக்கையின் நடைமுறை பயன்பாடுகள்
## PRACTICAL APPLICATIONS OF THE NEW COVENANT

பழைய உடன்படிக்கை அல்லது பழைய ஏற்பாடு எடுத்துப்போடப்பட்டது என்றும், நாம் இப்பொழுது புதிய உடன்படிக்கை அல்லது புதிய ஏற்பாட்டின் அதிகாரத்தின் கீழ் வாழ்கிறோம் என்றும் பார்த்தோம். நமது வாழ்க்கையில் இது என்ன பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது? இன்றைய மார்க்க உலகில், பொதுவாகவே போதிக்கப்பட்டு கடைபிடிக்கப்படும் அநேகமானவை பழைய உடன்படிக்கையில் போதிக்கப்பட்டவையே; மேலும் அவற்றிற்கு புதிய உடன்படிக்கையில் போதிக்கப்பட்டவையே; மேலும் அவற்றிற்கு புதிய உடன்படிக்கையில் எவ்வித ஆதாரமும் இல்லை. இப்படிப்பட்ட சில பொதுவான செயல்களை பார்ப்போம்.

### ஓய்வுநாளை ஆசரித்தல் (Sabbath Day)

ஏழாம் நாள் அத்வெந்த் சபை எனும் கூட்டம் போன்ற சில மார்க்க குழுக்கள், பத்து கட்டளையின் நான்காவது கட்டளை இன்றும் அமலில் இருக்கிறது என்று நம்புகின்றன. **யாத்திராகமம் 20:8–11 ல்,** நாம் "ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலை செய்து உன் கிரியைகளை நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும் உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களிலிருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்," என்று வாசிக்கிறோம். தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தபடியாலும், ஏழாம் நாளாகிய ஓய்வுநாளை சிருஷ்டிப்பின் நினைவாக அவர் ஏற்படுத்தினபடியினாலும், இன்றைக்கும் நாம் ஓய்வுநாளை கைக்கொண்டு ஆசரிக்க வேண்டுமென்று தர்க்கம் செய்கிறார்கள். (ஓய்வுநாள் ஆசரிப்புக் கட்டளையும் கற்பலகையில் எழுதப்பட்டவைகளில் ஒன்று என்றும்) பவுல் இந்த பிரமாணம் ஒழிந்து போகும் என்று திட்டவட்டமாக எழுதினார். "எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக் கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவனுடைய முகத்தை நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்தார்களே. ஒழிந்து போகிற மகிமையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்திருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்? அன்றியும் ஒழிந்துபோவதே மகிமையுள்ளதாயிருந்ததானால்,

நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே." **(2 கொரிந்தியர் 3:7,8, 11)** இப்படியாக ஓய்வுநாளை ஆசாரிக்கக் கொடுக்கபட்ட அதிகாரம் ஒழிந்து போயிற்று. ஓய்வுநாளை ஆசரிக்கும்படி கொடுக்கப்பட்ட கட்டளை, சீனாய் மலையில் (இஸ்ரவேலர்) வந்து சேரும் வரை கொடுக்கப்படவில்லை; எனவே அதுவரை யாரும் ஓய்வு நாளை ஆசரிக்கவில்லை. "நீர் சீனாய் மலையிலிறங்கி, வானத்திலிருந்து அவர்களோடே பேசி, அவர்களுக்குச் செம்மையான நீதி நியாயங்களையும் நல்ல கட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர். உமது பரிசுத்த ஓய்வுநாளை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, உமது தாசனாகிய மோசேயைக்கொண்டு, அவர்களுக்கு கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயப்பிரமாணங்களையும் கற்பித்தீர்" **(நெகேமியா 9: 13–14).** ஓய்வு நாள் பிரமாணம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு, மோசே மூலமாக சீனாய் மலையில்தான் முதலாவதாக அறிவிக்கப்பட்டது என்பதை நெகேமியா சொல்லுவதை கவனியுங்கள். கூடுதலாக, ஆதிக்கிறிஸ்தவ எழுத்துகளில் இருந்து. சபையானது வாரத்தின் முதல் நாளில் தான் அதின் ஆரம்பம் முதலே, ஆராதனைக்கென்று கூடிவந்தார்கள் என்று நாம் அறிவோம்.

## **இசைக்கருவி** (Instrumental Music)

பெரும்பாலான மார்க்க கூட்டத்தார் தங்களுடைய ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்துகின்றனர். புதிய ஏற்பாட்டில் இசைக்கருவியானதை, ஆராதனையில் பயன்படுத்தினதற்கான அதிகாரம் எதுவும் காணப்படவில்லை; மாறாக, பாடும்படி மட்டுமே கட்டளையிடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் இசைக்கருவியைப் பயன்படுத்தும்படி கட்டளை கொடுக்கப்பட்டிருப்பது உண்மைதான்; ஆகிலும், இன்றைக்கு நாம் கைக்கொள்ளும் காரியங்களுக்கு பழைய ஏற்பாடு அதிகாரமளிக்க முடியாது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பரலோகத்தை பற்றிய காரியங்களில் எக்காளம், சுரமண்டலம் ஆகிய இசைக் கருவிகளின் பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் அவைகள் தேவனை ஆராதிப்பதில் பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிடவில்லை. மேலும், வெளிப்படுத்தின விசேஷம் அடையாளங்களையும் உருவகங்களையும் கொண்ட ஒரு புத்தகம் பரலோகம் என்பது ஆவிக்குரியதேயன்றி மாம்சப் பிரகாரமானதல்ல; இப்படியிருக்க, மாம்சப் பிரகாரமான இசைக்கருவி எப்படி ஆவிக்குரிய இடத்தில் இடம் பெறும்? நமது மார்க்கத்தில் புதிய ஏற்பாடுதான் அங்கீகாரமளிக்கும் அதிகாரத்தைப் பெற்றது. எனவே இதன் புத்தகங்களில் இசைக்கருவிகள் பயன்பாடு பற்றி எவ்விதக்குறிப்பும்

இல்லை. கூடுதலாக, ஆதிச்சபை இசைக்கருவிகளை ஆராதனயில் பயன்படுத்தவில்லை.

**தசம பாகம் செலுத்துதல்** (Tithing)

அநேக மார்க்கக் கூட்டத்தார் தங்களுடைய அங்கத்தினர்களுக்கு தசமபாகம் செலுத்தும்படி கட்டளையிடுகின்றனர். ஒருவருடைய வருமானத்திலிருந்து தசமபாகம், அல்லது பத்தில் ஒரு பங்கு கொடுக்க வேண்டுமென பழைய ஏற்பாட்டில் கட்டளையிடப்பட்டது. "தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும், தசமபாகம் எல்லாம் கர்த்தருக்குரியது; அது கர்த்தருக்கு பரிசுத்தமானது" **(லேவியராகமம் 27:30).** இஸ்ரவேல் புத்திரர் முறைப்படி செலுத்தவேண்டிய தசமபாகத்தை செலுத்தவில்லை; இருப்பினும், அது அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. உண்மையிலே, இஸ்ரவேலர்கள் தாங்கள் கொடுக்க வேண்டிய பரகாரமாக கொடுத்திருந்தால், அது பத்தில் ஒரு பங்கை விடவும் அதிகமானது பழைய ஏற்பாட்டு காலத்தில் பயிற்சி செய்யப்பட்டதால், அநேகக் கூட்டதார் தாங்களும் தசமபாகம் செலுத்தக் கட்டளை பெற்றவர்கள் என்று நம்புகின்றனர். நாம் தேவனுக்கு கொடுக்கும்படி கட்டளை பெற்றிருக்கிறோமேயன்றி, ஆனாலும் நாம் தசமபாகம் செலுத்த வேண்டுமென்று ஒரு இடத்தில் கூட கட்டளையிடப்படவில்லை. "நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும், தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்" **(1கொரிந்தியர் 16:2).** இங்கே நாம் கொடுக்க வேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளது; ஆகிலும், பவுல் நமது வரவுக்குத்தக்கதாகக் நம்மை கொடுக்கும்படி சொல்லுகிறார்; குறிப்பிட்ட ஒரு தொகை குறிப்பிடப்படவில்லை. ஆகிலும், மிகக் குறைவாக நாம் கொடுத்தால் போதுமென்று பொருளல்ல; ஒரு குறைவான உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்தவர்களாகிய இஸ்ரவேலர்களே தசமபாகம் செலுத்த வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருந்தால், மிகச் சிறப்பானதொரு உடன்படிக்கையின் கீழ் வாழ்கிற நாமனைவரும் நிச்சயமாக குறைந்தபட்சம் அந்த அளவாவது கொடுக்க வேண்டும். இப்படியாக, நாம் தசமபாகம் கொடுக்க வேண்டும் என்ற கட்டளை கொடுக்கப்படாதிருந்த போதிலும், தசமபாகம் என்பது நமது கொடுத்தலின் ஆரம்பம் மட்டுமே, முடிவு அல்ல! பவுல், கிறிஸ்தவர்கள் உற்சாகமாகக் கொடுக்க வேண்டுமென்றும், விசனமாயும் கட்டாயமாயுமல்ல என்றும் கட்டளையிட்டார் **(2 கொரிந்தியர் 9:7).** நாம் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று

நமக்கு கட்டளையிடப்பட்டால், பிறகு அது உற்சாகமாய் கொடுத்தலாகாது; மனப்பூர்வமாய்க் கொடுக்கப்படாத அந்தத் கொடுத்தல், எந்தவித ஆசீர்வாதத்தையும் நமக்கு கொண்டுவராது.

**தேவனிடத்தில் நேரடியாக ஜெபித்தல்** (Praying Directly to God)

பழைய பிரமாணத்தின்கீழ், தேவனிடத்தில் ஆராதனையின் மூலம் கிட்டிச் சேரும் போது, ஒரு ஆசாரியன் மூலமே சேர வேண்டும். ஜனங்கள் மிருகங்களை பலியிட்டனர், ஆனால் உண்மையில் ஆசாரியனால் மட்டுமே அந்த பலிகளைச் செலுத்த முடியும். ஆசாரியர்கள் தான் தூயவர்க்கமிட்டனர். இன்னொரு வார்த்தையில் சொன்னால், ஆசாரியன்தான் மனுஷருக்கும் தேவனுக்கும் இடையில் நின்றான்.

மாறாக, புதிய ஏற்பாட்டின் கீழ் மனுஷன் தேவனிடத்தில் நேரடியாக நெருங்கி சேரலாம். தேவனிடத்தில் கிட்டிச் சேர நாம் எந்த ஆசாரியன் மூலமாகவும் செல்ல வேண்டுவதில்லை; ஏனெனில் நாம் எல்லாருமே ஆசாரியர்கள்தான்; அதாவது, நாம் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாய், ஆவிக்குரிய பலிகளைச் செலுத்துகிறவர்களாயிருக்கிறோம் **(1 பேதுரு 2:5).** நாம் மிருக பலி செலுத்துவதில்லை;ஆனாலும் நாம் பலிகளைச் செலுத்துகிறோம்."அப்படியிருக்கச் சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" **(ரோமர் 12:1).** "ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" **(எபிரேயர் 13:15).** நாம் பலி செலுத்துகிறோம், ஆனால் அந்த பலிகளெல்லாம் நம்மை நாமே செலுத்துவது ஆகும். பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தில் தேவனுக்கு தூப வர்க்கமிடவேண்டும் என கட்டளையிடப்பட்டது **(யாத்திராகமம் 30:8).** இன்றைக்கு நாம் ஜெபிக்கும் ஜெபமே தூபவர்க்கம் செலுத்துவதாகும். "அந்த நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக் கொண்டு, ஆட்டுக்குட்டியானவர்க்கு முன்பாக வணக்கமாய் விழுந்து" **(வெளி 5:8).** இங்கே வலியுறுத்தப்படுவதெல்லாம் ஆவிக்குரிய தன்மையில் என்பதைக் கவனியுங்கள்; நாம் தேவனுக்குச் செய்யும்

இந்த ஆராதனையில், கூடுதலாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனிடத்தில் நேரடியாக சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

**விருத்தசேதனம்** (Circumcision)

மாம்ச விருத்தசேதனம் பழைய உடன்படிக்கையின் ஒரு அடையாளம். ஒவ்வொரு யூத மார்க்கத்து ஆண்பிள்ளையும், சரீரத்தில் பெறும் விருத்தசேதனமானது, அவன் தேவனோடு உறவுமுறைகொள்ளும் உடன்படிக்கையின் அடையாளம். கிறிஸ்தவர்களுக்கும் ஒரு விருத்தசேதனமுண்டு; ஆனால் அது ஆவிக்குரிய மற்றும் இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமாகும். "அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்த சேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்." என்று **கொலே 2:11 ல்** வாசிக்கின்றோம். பவுல், இந்த விருத்தசேதனத்தை கைகளினால் செய்யப்படாத விருத்தசேதனமென்றும், பழைய பிரமாணத்தின் காலத்தில் மாம்சத்திலே செய்யப்பட்ட விருத்தசேதனத்தை போன்றது அல்ல என்றும், குறிப்பிடுவதை கவனியுங்கள். இந்த ஆவிக்குரிய விருத்தசேதனம் பாவத்தினாலாகிய மாம்ச மனுசனை களைந்து போடுவதாக அடையாளப்படுத்தப்படுகிறது. "உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய" **(ரோமர் 2:29).** மேலும் பவுல் **கலாத்தியர் 5:6ல்,** "கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்" என்கிறார்.

சிலர் ஞானஸ்நானத்தை உடன்படிக்கையின் ஒரு அடையாளமாக பொறுத்திப்பார்க்க விரும்புகின்றனர்; பவுல் அப்படி குறிப்பிடவில்லை. **கொலே. 2:12ல்,**"ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" என்று கூறுகிறார். நாம் ஞானஸ்நானத்திலே அடக்கம் பண்ணப்படும்போது இந்த ஆவிக்குரிய விருத்தசேதனம் இடம் பெறுகிறது. இப்படியாக நாம் பெறும் ஞானஸ்நானம் விருத்த சேதனமல்ல; மாறாக நமது பாவங்களை மன்னிப்பதன் மூலம் அந்த நேரத்தில்தான் தேவன் ஆவிக்குரிய

முறையில் விருத்த சேதனம் செய்கிறார். ஞானஸ்நானம் ஒருபோதும் புதிய உடன்படிக்கைக்கு முத்திரையாக அல்லது அடையாளமாகச் சொல்லப்படவில்லை. மாறாக, பரிசுத்த ஆவியே நமக்கு முத்திரையாக கொடுக்கப்பட்டுள்ளது, **(எபேசியர் 4:30).**

## முடிவுரை

இன்று அதிகாரமளிக்கப்படாத நிலையில் மார்க்கத்தில் கைக்கொள்ளப்படுகிற அநேகக் காரியங்களைச் சுருக்கமாக நாம் பார்த்தோம். ஒரு பெரிய அளவில், ஜனங்கள் உடன்படிக்கைகளுக்கிடையே காணுகிற வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளாததால் வருகிற காரியங்கள். பழைய ஏற்பாட்டில் கைக்கொள்ளப்பட்ட சில விஷயங்களை இன்றைக்கு நாம் கை கொள்ளுவதில்லை. நாம் தேவனுக்குச் செய்யும் சேவையில் கைக்கொள்ளும் காரியங்களுக்கு எந்த அதிகாரத்தில் செய்யப்படுகிறது என்பதைக் காணவேண்டும்; எப்படியாயினும், அந்த அதிகாரம் புதிய உடன்படிக்கையில் அல்லது புதிய ஏற்பாட்டில் காணுகிறது. இந்தக் கல்விமுறையில் உடன்படிக்கைகளுக்கிடையேயான வித்தியாசங்களைப் புரிந்துகொள்ள உதவியாயிருந்திருக்குமென்று நம்புகிறோம். இப்படி தேவனுடைய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப்பார்க்க நம்மை அனுமதித்துள்ளது **(2 தீமோ 2:15).**

பெயர் ........................................ பதிவு எண் ........................................

**கேள்விகள்**

1. கற்பலகைகளில் எழுதப்பட்ட கட்டளைகள் என்ன ?

2. ஓய்வுநாள் கட்டளை இஸ்ரவேல் புத்திரருக்கு செய்யப்பட்டது என்று நெகேமியா எங்கே சொன்னார் ?

3. இப்பொழுது நாம் தேவனுக்கு செலுத்தும் தூபவர்க்கம் என்ன ?

4. பழைய உடன்படிக்கையின் அடையாளமாக செய்யப்பட்டது என்ன ?

5. கைகளினால் செய்யப்படாத விருத்தசேதனம் எது ?

**உண்மை / தவறு**

1. தசம பாகம் என்றால் ஒருவருடைய வருமானத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டிய 'பத்தில் ஒரு பங்கு.'

உண்மை/தவறு

2. புதிய ஏற்பாட்டில், இசைக்கருவி பயன்படுத்த அதிகாரம் அளிக்கப்படவில்லை.

உண்மை/தவறு

3. இன்றைக்கு நமக்கு தசமபாகம் செலுத்த கட்டளை கொடுக்கப்படவில்லையாதலால் நாம் மிகவும் கொஞ்சமாகக் கொடுத்தால் போதும் என தேவன் எதிர்பார்க்கிறார்.

உண்மை/தவறு

4. ஞானஸ்நானம், புதிய உடன்படிக்கையின் அடையாளமாக அல்லது முத்திரையாக இருக்கிறது.

உண்மை/தவறு

5. ஆவிக்குரிய தன்மையில் தேவனுக்கு ஆராதனையும் சேவையையும் செய்வதே புதிய ஏற்பாட்டில் வலியுறுத்தப்படுகிறது.

.

உண்மை/தவறு